**செய்தி வெளியீடு எண் : 1511** **நாள் : 01.09.2022**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் 2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.**

**"பெருமளவில் விவசாயத் தொழில் புரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும்".**

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெருமளவில் விவசாயத் தொழில் புரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 450 ஆதிதிராவிடர் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,02,50,000 (ரூபாய் இரண்டு கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மானியமாக ஒன்றிய அரசு நிதியிலிருந்து (SCA – SCP) செலவிட நிர்வாக அனுமதி வழங்கியும் மற்றும் 50 பழங்குடியினர் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்கி பயனடைய ரூ.22,50,000/- (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாநில அரசு நிதியிலிருந்தும் பெற்று வழங்க நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசாணை(நிலை)எண்.64, ஆதி(ம)பந(சிஉதி) துறை, நாள்.11.08.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in